

பாடம் 12

ஜூன் 15-21

# பூமியின் கடைசிச் சம்பவங்கள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோவான் 8:32; எசே 20:12,20; வெளி 7:1,2; வெளி 14:1; யோவேல் 2:21–24; ஓசி 6:3; யாக் 5:7,8; வெளி 18:1–4.

**மனன வசனம்:** சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு. நீதிமொழிகள் 23:23.

உங்கள் பதின்ம வயது மகள், விடுமுறைக்காக கல்லூரியிலிருந்து வீட்டிற்கு காரை ஓட்டிக்கொண்டு வருகிறாள். அப்போது சீதோஷ்ண நிலைபற்றிய அறிக்கையைக் கேட்கிறீர்கள். சீதோஷ்ண நிலை மோசமடையும் என்று கேட்டதும் உங்களுக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. தொடுவானத்தில் மேகங்கள் கருக்க ஆரம்பிக்கின்றன. சூறாவளிக் காற்று வீசுகிறது. மழை பயங்கரமாகக் கொட்டுகிறது. மரங்கள் முறிந்து விழுகின்றன. வீட்டிற்கு வருகிற பிரதான சாலை மூடப்படுகிறது. அப்போது பக்கவாட்டிலுள்ள ஒரு சாலை வழியாக வரமுடியுமென பக்கத்து வீட்டுக்காரர் சொல்லுகிறார். அந்தச் சாலையிலும் மரங்கள் விழுந்து கிடந்தாலும், காரை ஓட்டி வந்துவிடலாமென்கிறார். தகவல்தொடர்பு சரியில்லாத நிலையிலும், மகளுக்கு ஒரு குறுஞ்செய்தியை அனுப்புகிறீர்கள்; அதில், வீட்டிற்கு பத்திரமாக வந்து சேருவதற்கான வழியை கவனமாகத் தெரிவிக்கிறீர்கள்.

வாழ்க்கையின் சூறாவளிகளிலிருந்து நம்மைக் காப்பாற்றி, நம்மை வீட்டிற்கு அழைத்துவர இயேசு விரும்புகிறார். ‘கொஞ்சமும் தீவிரம் குறையாத ஒரு சூறாவளி வருகிறது. அதை எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்கிறோமா?’ கிறிஸ்துவினுடைய வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் ஆகியவற்றின் நோக்கம் நம்மை வீட்டிற்கு அழைத்து வருவதே. அன்புள்ள இரட்சகரின் பாசமான அரவணைப்பை நாம் அனுபவிக்கவேண்டும். அதற்காக, கடைசிக்கால மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தெய்வீக வழிகாட்டல்கள்தாம் தானியேல் - வெளிப்படுத்தல் தீர்க்கதரிசனச் செய்திகள்.

தீர்க்கதரிசன வார்த்தை என்ன சொல்கிறது என்று பார்ப்போம்; மேலும், பூமியின் இறுதிப் போராட்டத்தின் ஊடே நம்மைத் தூக்கிச்சென்று, நம்மை வீடு சேர்ப்பதில் இயேசு எவ்வளவுக்குப் பெலமுள்ளவர் என்று கண்டுகொள்வோம்.

***மாபெரும் போராட்டம், 37,38ம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, ஜூன் 22 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# தேவனுக்கும் அவரது வார்த்தைக்கும் உண்மையாக

**இந்த வசனங்களில் பொதுவாகக் காணப்படும் கருத்து என்ன? நீதி 23:23, யோவான் 8:32; 17:17.**

மாபெரும் போராட்டம், உண்மைக்கும் பொய்க்கும் இடையேயான ஒரு யுத்தமாக காலம்நெடுகிலும் நடைபெற்று வருகிறது. சாத்தான் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாக இருக்கிறான். யோவான் 8:44. இயேசு சகல சத்தியத்தின் ஆதாரம். 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' என்று இயேசு சொன்னார். யோவான் 14:6. சாத்தானுடைய வஞ்சகங்களிலிருந்து நம்மை விடுவிக்கிற சத்தியம் தேவவார்த்தையில் உள்ளது. வேதாகமம் சாத்தானுடைய வஞ்சகங்களைத் தோலுரித்து, தேவனுடைய திட்டங்களை வெளிப்படுத்துகிறது. வேதாகமம் நம் பாதைக்கு தீபமாக இருக்கிறது. சங் 119:105. 'உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்' சங் 119:130. 'உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம்'. சங் 119:160.

**தீர்க்கதரிசனம் சம்பந்தமாக அப்போஸ்தலன் கொடுக்கிற நிச்சயம் என்ன? 2பேதுரு 1:16-21. தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தையின் முக்கியத்துவத்தைக் காட்ட அவர் பயன்படுத்துகிற எடுத்துக்காட்டு என்ன?**

நாம் 'தந்திரமான கட்டுக்கதைகளைப்' பின்பற்றவில்லை. தேவ வார்த்தையிலுள்ள தீர்க்கதரிசனங்கள் முன்னிருக்கிற பாதைக்கு வெளிச்சம் வீசுகின்றன. பொய்யிலிருந்து சத்தியத்தைப் பிரித்துக் காண உதவுகின்றன. வேதாகமம் இல்லாமல், மனிதகருத்துகளுக்குச்செவிசாய்த்தால், எளிதில்வஞ்சிக்கப்படுவோம். 'பொய்ப்போதகர்களின் செல்வாக்கிற்கும் அந்தகார ஆவிகளுடைய வஞ்சக வல்லமைக்கும் எதிராக வேதவாக்கியங்கள் பாதுகாவலாக இருப்பதாக தேவ மக்களுக்குச் சொல்லப்படுகிறது. வேதாகம அறிவை மனிதர்கள் பெறாதபடி தடுக்க சாத்தான் சாத்தியமான ஒவ்வொரு உபாயத்தையும் பயன்படுத்துகிறான்; ஏனெனில், அவற்றின் தெளிவான வார்த்தைகள் அவனது வஞ்சகங்களை வெளிப்படுத்துகின்றன. கடைசி மாபெரும் வஞ்சகம் விரைவிலேயே நமக்குமுன் அரங்கேற உள்ளது. நம் கண்காண அந்திக்கிறிஸ்து அற்புதங்களைச் செய்ய இருக்கிறான். கிட்டத்தட்ட உண்மையைப் போலவே போலியும் இருக்கப்போவதால், வேதவாக்கியங்களினால் அல்லாமல் அவற்றை வேறுபடுத்தி அறிவது சாத்தியமல்ல.... வேதாகமச் சத்தியங்களால் தங்கள் சிந்தையைச் செறிவூட்டியிருப்பவர்கள்மட்டுமே கடைசி மாபெரும் போராட்டத்தின்மத்தியில் நிலைநிற்பார்கள். 'நான் மனிதர்களுக்குக் கீழ்ப்படிகிறதைவிட தேவனுக்குக் கீழ்ப்படிகிறேனா?' என்று தங்களை ஆராயவேண்டிய சோதனை ஒவ்வொருவருக்கும் உண்டாகும். அதை முடிவுசெய்கிற வேளை இப்போதே வந்திருக்கிறது. தேவனுடைய மாறாத வார்த்தை எனும் கற்பாறையின்மீது நமது பாதங்கள் ஊன்றியிருக்கின்றனவா? தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் விசுவாசத்தையும் காத்துக்கொள்ள உறுதியாக நிற்க ஆயத்தமாயிருக்கிறோமா?'

---

**மேலுள்ள மேற்கோளிலுள்ள கேள்விகளை ஆராயுங்கள். இறுதி நெருக்கடியில் நாம் நிலைத்து நிற்க எது பெலனளிக்கும்? தேவ வார்த்தையை ஆராயாதபடி எது கவனத்தைச் சிதறடிக்கிறது? தனிப்பட்ட இன்பங்களுக்காக எவ்வாறு சத்தியத்தில் சமரசமாகிறோம்?**

# பரலோகத்திற்காக முத்திரிக்கப்படுதல்

தொழுகை சம்பந்தமாக வரவிருக்கிற நெருக்கடியில், தேவனுக்கு உண்மையானவர்கள் உலக அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டார்கள். வெளி 14:12. பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றிருப்பார்கள். எபே 4:30. அவர்கள் சமரசமாகமாட்டார்கள். முற்காலங்களில் அதிகாரப்பூர்வ ஆவணங்களின் அசல்தன்மையை அங்கீகரிக்க முத்திரையிடுவார்கள். அந்த முத்திரைகள் தனித்தன்மை வாய்ந்தவையாக இருக்கும். இறுதிப் போராட்டமானது தொழுகைபற்றியது; தேவ பிரமாணத்தில் வெளிப்பட்டுள்ள அவரது அதிகாரம் பற்றியது, எனவே, தேவனுடைய முத்திரை அவரது பிரமாணத்தில் இருக்கிறதென புரிந்துகொள்ள முடிகிறது.

**ஓய்வுநாள் கட்டளையில் முத்திரையின் என்னென்ன அம்சங்கள் உள்ளன? யாத் 20:8-11.**

---

ஒரு அசல் முத்திரையின் மூன்று அம்சங்கள் இதில் உள்ளன: 1) அந்த முத்திரைக்கு சொந்தக்காரர் - 'உன் தேவனாகிய கர்த்தர்'. 2) அவரது பதவி - சிருஷ்டிகர். 3) அவரது ஆட்சி எல்லை - 'வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும்'. முத்திரையானது அடையாளம் என்றும் கூறப்படுகிறது. ரோமர் 4:11. எனவே இந்த இரு வார்த்தைகளும் ஒரே அர்த்தமுடையவை. ஓய்வுநாளானது தேவனுடைய பிரமாணத்தில் முத்திரையாக அல்லது அடையாளமாக இடம்பெற்றிருப்பதால், தொழுகை சம்பந்தமான இறுதிப் போராட்டத்தின் மையமாக இருக்கிறது. எசே 20:12,20; வெளி 12:17.

**வெளி 13:16,17 உடன் வெளி 7:1-3; வெளி 14:1ஐ ஒப்பிடுங்கள். தேவனுடைய முத்திரை எங்கு போடப்படுகிறது? மிருகத்தின் முத்திரை எங்கெல்லாம் போடப்படுகின்றன? இரண்டும் வித்தியாசப்படுத்திக் காட்டப்படுவது ஏன்?**

---

தேவனுடைய முத்திரை நெற்றியில் போடப்படுகிறது. நெற்றியானது மனதிற்கு அடையாளமாக இருக்கிறது; மனதாரத் தீர்மானம் செய்வதை அது சுட்டிக்காட்டுகிறது.

மிருகத்தின் முத்தரை நெற்றியிலோ கையிலோ போடப்படுகிறது; அதாவது, அறிவுப்பூர்வமாக உணர்ந்து, சாத்தானுடைய பொய்களை மனதார ஏற்றுக்கொள்ளத் தீர்மானிப்பதையும், தாங்கள் கொல்லப்படாமல் இருக்க பொய்த் தொழுகைக்கு ஒத்துப்போவதையும் காட்டுகிறது.

தேவனுக்குக்கீழ்ப்படிகிறவர்களை சாத்தான் வெறுக்கிறான். 'தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிற' விசுவாசமுள்ள மீதமானவர்கள்மீது சாத்தான் யுத்தம் தொடுக்கும்போது, மாபெரும் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைகிறது. வெளி 14:12. கிறிஸ்துவின் மீதான மெய்ப்பற்றில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

---

**இறுதி நெருக்கடி வரும்போது ஆயத்தமாக இருப்பதற்கு, தினமும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பது ஏன் முக்கியமானது?**

# யாரைத் தொழுகிறோம்?

சிருஷ்டிகரைத் தொழுகிறோமா? அல்லது மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் தொழுகிறோமா? தொழுகை சம்பந்தமாகவே மாபெரும் போராட்டம் நடைபெறும். இதில் நடுநிலைக்கு வாய்ப்பே இல்லை. வெளி 14இன் முதலாம் தூதன், 'வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள்' என்கிறான். வெளி 14:7. பரலோக வேண்டுதலுக்கு ஆதரவாக மூன்றாம் தூதன், மிருகத்தைத் தொழுவதின் கொடிய விளைவுகளை வெளிப்படுத்துகிறான்: 'அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடி(ப்பான்)'. வெளி 14:10. மாறாக, சிருஷ்டிகரைத் தொழுதுகொள்பவர்கள்பற்றி 'தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்(கள்)' என்று வெளி 14:12 சொல்கிறது.

சிருஷ்டிப்புதான் மெய்த்தொழுகையின் அடிப்படை. வெளி 4:11. தேவன் 'இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்திருப்பதால்' (எபே 3:11), சாத்தான் சிருஷ்டிகரை வெறுக்கிறான்; சிருஷ்டிப்பின் நினைவுச்சின்னமான ஓய்வுநாளை மாற்றுவதற்கு உலக வல்லமைகள்மூலம் முயன்றிருக்கிறான். தானி 7:25. தேவனுடைய பிரமாணம் சம்பந்தமாக வரவிருக்கிற போராட்டம் அதிகாரம் யாருக்கு என்பதின் அடிப்படையில் இருக்கும். ஓய்வுநாள் தொழுகையை சாத்தானால் ஒழிக்கமுடிந்தால், தேவனுடைய அதிகாரத்தைவிட தானே அதிகாரமுள்ளவன் என்று அவனால் சொல்லமுடியும். இதை நிறைவேற்ற, பொய் ஓய்வுநாளை ஏற்றுக்கொள்ள உலகம்முழுவதையும் வற்புறுத்துவான்.

இவ்வாறு நிகழ வாய்ப்பில்லாததுபோல நமக்குத் தோன்றினாலும், உலகத்தில் மாற்றம் திடீரென ஏற்படமுடியும். கோவிட்-19 ஒரு ஆதாரம். மிருகத்தின் முத்திரை சம்பந்தப்பட்ட நிகழ்வுகள்குறித்து விலாவரியாக நமக்குத் தெரியாவிட்டாலும், அதைப் புரிந்துகொள்வது கடினமல்ல. உலகம் நிலையற்றது; இன்று தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, வேதாகமம் எச்சரிப்பதுபோல மாற்றம் மிகவேகமாக நடைபெறமுடியும் என்பதைக் காட்டுகிறது.

**மிருகத்தின் முத்திரையைப் பெறாதவர்களுக்கு குறிப்பாக என்னென்ன தண்டனைகள் கொடுக்கப்படும்? வெளி 13:13-17.**

மிருகத்திற்கும் அதன் சொரூபத்திற்கும் எதிராக கிறிஸ்துவுக்கு உண்மையாக இருப்பவர்கள், பொருளாதாரத் தடைகளுக்கும், மரண தண்டனைக்கும் ஆளாவார்கள். எப்போதும்போல இப்போதும் மனுக்குலத்தில் சீர்கேடு, அதிகார வேட்கை, வன்முறை அதிகம் காணப்படுகிறது. கடைசிக்காலத்தில் உபத்திரவம் வரும் என்பதை யோசித்துப் பார்ப்பது கடினமாக இல்லை. யோவானின் பின்வரும் வார்த்தைகளிலிருந்து இதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இயேசுவைப் பற்றிப் பேசும்போது, 'மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை' என்று யோவான் சொல்கிறார். யோவான் 2:25.

---

**மனுக்குலத்தின் சீர்கேட்டையும், மனிதர்களால் எவ்வளவு தீமை செய்யமுடியும் என்பதையும் யோசியுங்கள். இறுதி நிகழ்வுகள் நிச்சயம் சம்பவிக்கும் என்பதற்கு இவை எவ்வாறு ஆதாரங்களாக உள்ளன? நம் இருதயங்களை நாம் காத்துக்கொள்ள வேண்டியதுபற்றி இந்த மோசமான உண்மை சொல்லுவது என்ன?**

# முன்மாரியும் பின்மாரியும்

**முதலாம் நூற்றாண்டில் நிறைவேறிய தீர்க்கதரிசனம் என்ன? அது உண்டாக்கிய தாக்கம் என்ன? யோவேல் 2:21-24; அப் 2:1-4, 41-47.**

---

---

பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் ஊற்றப்பட்டார்; வல்லமையான வகையில் கிறிஸ்தவ சபை ஸ்தாபிக்கப்பட்டது. ஒரே நாளில் மூவாயிரம் பேர் மனமாறினார்கள். தேவனுடைய மறுரூபமாக்குகிற கிருபையால் அடுத்தடுத்து அற்புதங்கள் நிகழ்ந்ததாக அப்போஸ்தலர் பதிவுசெய்கிறது: 'வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது'. அப் 4:4. விசுவாசிகள் 120 பேர்தாம் ஒன்றுகூடி ஜெபித்தார்கள்; ஆனால், ஜெபம் மிகப்பெரிய வித்தியாசத்தை உண்டுபண்ணியது. சீக்கிரமே சபையில் ஆயிரக்கணக்கானோர் சேர்க்கப்பட்டார்கள். 'ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்' அப் 6:7.

எருசலேமில் சீடர்களுக்கு மிகுந்த உபத்திரவம் உண்டானபோது, அவர்கள் 'எங்கும் திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்'. அப் 8:4. யூதேயா, சமாரியா, கலிலேயா முழுவதிலும் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அப் 9:31. பவுல் மனமாற்றமடைந்தபிறகு, மத்தியத் தரைக்கடல் பகுதி முழுவதிலும் கிறிஸ்துவை அறிவித்தார். தெசலோனிக்கேயாவில், சுவிசேஷத்தை எதிர்த்த யூதர்கள் சிலர் இவர்களைப் பார்த்து, 'உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். அப் 17:6. ஆரம்பகாலத் திருச்சபை எவ்வளவு தூரம் ஊழியத்தைச் செய்துவந்தது என்பதற்கு இது வல்லமையான சாட்சி. பரிசுத்த ஆவியின் வல்லமையால், அப்போது அறியப்பட்ட உலகம் முழுவதிலும், குறைந்த நேரத்தில், சத்தியத்தைப் பரப்பினார்கள். முன்மாரி பற்றி யோவேல் உரைத்த தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது; ஆனால் பூமியின் இறுதி அறுவடைக்கு ஆயத்தமாக்கும்படி பின்மாரியானது மிகுந்த வல்லமையோடு அருளப்படப் போகிறது.

**பூமியில் தேவபணி எவ்வாறு முடிவடையப் போகிறது? சக 4:6; 10:1; ஓசி 6:3; யாக் 5:7,8.**

---

---

'முன்மாரி, பின்மாரி' எனும் வார்த்தைகள் இஸ்ரவேலின் அறுவடைச்சுழற்சி சம்பந்தப்பட்ட வார்த்தைகள். விதை முளைக்கிற இலையுதிர் காலத்தில் முன்மாரி பெய்யும். அறுவடை முதிருவதற்காகப் பின்மாரி பெய்யும். சுவிசேஷத்தை அறிவிக்கிற பணியில் ஆவியானவரின் கிரியையை இது விளக்குகிறது. சுவிசேஷம் அறிவிக்கப்படத் துவங்கிய சமயத்தில், விதைக்கப்படுகிற விலையேறப்பெற்ற விதை முளைக்கும் வகையில் 'முன்மாதிரி' கொடுக்கப்பட்டதுபோல, அறுவடை முதிரும்படி 'பின்மாரி' கொடுக்கப்படும்'.

# பலத்த சத்தம்

**பூமியில் தேவபணி எவ்வாறு முடிவடையுமென பின்வரும் வசனங்கள் சொல்கின்றன? வெளி 18:1-4; ஆபகூக் 2:14; மத் 24:14.**

பாபிலோனின் விழுகையை அறிவித்த தூதன் 'மிகுந்த அதிகாரமுடையவனாய்' இருந்தான். வெளி 14இன் தூதர்களைப் போல, இந்தத் தூதனும் மனித தூதுவர்களைத்தான் சுட்டிக்காட்டுகிறான். அந்தத் தூதன் தேவனுடைய மகிமையை முழுவதும் வெளிப்படுத்தியதால், அது பூமிமுழுவதையும் பிரகாசமாக்கியது. புதிய ஏற்பாட்டில் அதிகாரம் என்பதற்கு வருகிற கிரேக்க வார்த்தை எக்ஸவ்ஸியா. அது அதிகாரங்களுக்கும் நரகத்தின் வல்லமைகளுக்கும் மேலாக கிறிஸ்து வெற்றிபெற்றதைச் சுட்டிக்காட்டுகிறது. மத்தேயு சுவிசேஷத்தில், தம் சீடர்களை ஊழியத்திற்காக இயேசு அனுப்பின சமயத்தில் இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இயேசு தம் சீடர்களுக்கு துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் மேலாக அதிகாரம் கொடுக்கிறார். மத் 10:1. நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கான தெய்வீக வல்லமையுடன் அவர்களை அனுப்புகிறார். மத் 28இல் மீண்டும், 'வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தோடும்' அனுப்பி, 'நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்.' என்கிறார். மத் 28:18,19.

புதிய ஏற்பாட்டுத் திருச்சபை ஆவியின் வல்லமையால் நிறைந்து, தம் வாழ்வாலும் மரணத்தாலும் துரைத்தனங்களுக்கும் நரகத்தின் வல்லமைகளுக்கும் மேலாக வெற்றிபெற்ற ஜீவனுள்ள கிறிஸ்துவின் அதிகாரத்துடன் சென்று, தேவனுடைய மகிமையால் பூமியைப் பிரகாசமாக்கியது. ஒரு சில வருடங்களிலேயே, அப்போது அறியப்பட்ட உலகத்திற்கு சீடர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். கொலோ 1:23.

முடிவுக்காலத்தில், இதற்குமுன் இல்லாத அளவுக்கு வல்லமையோடு ஆவியானவர் ஊற்றப்படுவார்; பூமியின் கடைசிமட்டும் சுவிசேஷம் வேகமாகம் பரவும். ஒரே நாளில் ஆயிரக்கணக்கானோர் மனமாற்றடைவார்கள்; தேவகிருபையும் சத்தியமும் பூமிமுழுவதிலும் தாக்கத்தை உண்டாக்கும். இவ்வாறு, உலகம் எச்சரிக்கப்படும்; சுவிசேஷமும் அது அருளுகிற நம்பிக்கையும் உலகம்முழுவதிற்கும் பரவும்.

'சுவிசேஷத்தின் மாபெரும் பணி துவங்கியபோது காணப்பட்ட தேவ வல்லமையின் வெளிப்பாடு அது முடியும்போது அதைவிட குறைவாக இருக்கப் போவதில்லை. சுவிசேஷம் அறிவிக்கப்பட துவங்கியபோது ஊற்றப்பட்ட முன்மாரியால் நிறைவேறின தீர்க்கதரிசனங்கள், அதன் முடிவில் ஊற்றப்படப் போகிற பின்மாரியிலும் நிறைவேறப் போகின்றன.

'தேவஊழியர்கள், பரிசுத்த அர்ப்பணிப்பால் தங்கள் முகங்கள் ஜொலித்துப் பிரகாசிக்க, பரலோகம் தந்த செய்தியை அறிவிக்க, ஒவ்வொரு இடமாக விரைவார்கள். பூமி முழுவதிலும் ஆயிரக்கணக்கானவர்களால் எச்சரிப்பு கொடுக்கப்படும். அற்புதங்கள் நடக்கும்; நோயாளிகள் குணமடைவார்கள்; தேவஊழியர்கள் செல்கிற இடங்களில் அடையாளங்களும் அதிசயங்களும் நடக்கும்.'

---

**ஆவியானவரின் மகிமையான ஊற்றப்படுதலுக்கும், பின்மாரிக்கும், உரத்த சத்தத்திற்கும் இணங்காதபடி உங்களைத் தடுத்துக் கொண்டிருப்பது என்ன? நம் தனிப்பட்ட பங்கு சிறியதாக இருக்கலாம்; ஆனாலும் ஆவியானவர் ஊற்றப்படுதலுக்கு இணங்கவும் அதைப் பெறவும் நாம் என்ன பங்காற்றலாம்?**

# மேலும் படிக்க:

1851ம் ஆண்டிலேயே, வெளி 13:11–17 சொல்கிற இரண்டாம் மிருகம் அமெரிக்காதான் என்று அட்வென்டிஸ்ட் முன்னோடிகள் அடையாளம் கண்டார்கள். ஆனால், அமெரிக்கா எப்படி முதலாம் மிருகத்தை வணங்கும்படி செய்யப்போகிறது என்பதைப் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. வெளி 13:12. 1880 களில், அமெரிக்க கப்பற்படையில் மொத்தம் 48 பழைய கப்பல்களே இருந்தன. ஆனால் பனிப்போர் முடிந்தபிறகு, எந்த இராணுவமும் ஈடு கொடுக்கமுடியாத அளவுக்கு அமெரிக்க இராணுவம் வளர்ந்தது. அமெரிக்கர்கள் அற்புதமான விடுதலையை அனுபவித்தார்கள்; சூழ்நிலை கடினமாகியபோது, அந்த விடுதலை நசுக்கப்பட்டது; முற்றிலும் அடக்கப்பட்டது. இப்போதே அது நடந்துவருவதைக் காணமுடிகிறது.

‘அதற்கு (பொய்யான ஓய்வுநாள் ஆசரிப்புக்கு) இணங்க மறுக்கிற அனைவருக்கும் சட்டப்படி தண்டனை வழங்கப்படும்; இறுதியாக அவர்கள் மரணத்திற்கு தகுதியானவர்களென அறிவிக்கப்படும். மறுபுறம், சிருஷ்டிகரின் ஓய்வுநாள் உள்ளிட்ட தேவனுடைய கட்டளைகள் நம்மிடம் கீழ்ப்படிதலைக் கோருகின்றன; அவற்றின் போதனைகளை மீறுகிற அனைவருக்கும் எதிராக தேவகோபம் வருமென எச்சரிக்கின்றன’.

‘இந்தப் பிரச்சினை நெருங்கநெருங்க, ஒரு பெரிய கூட்டத்தின மூன்றாம் தூதனுடைய செய்தியை விசுவாசிப்பதாகச் சொல்லிக்கொண்டாலும், சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதால் வருகிற பரிசுத்தமாகுதலைப் பெறாமல், தங்கள் நிலைகளைவிட்டு, எதிரணியில் சேருவார்கள். உலகத்தோடு இணைந்து, அதன் ஆவியில் பங்குகொண்டு, அதே வெளிச்சத்தில் அனைத்தையும் பார்க்கிற நிலைக்கு வந்திருப்பார்கள்; ஆகவே, சோதனை வரும்போது, பிரபலமான பக்கத்தைத் தேர்ந்தெடுக்க ஆயத்தமாகிகிறார்கள். திறமையாகவும் இனிமையாகவும் பேசக்கூடியவர்கள், ஒருசமயத்தில் சத்தியத்தில் களிகூர்ந்தவர்கள், தங்கள் ஆற்றல்களை ஆத்துமாக்களை வஞ்சித்து தவறாக நடத்தப்பயன்படுத்துவார்கள். தங்கள் முன்னாள் சகோதரர்களின் மிகக்கொடிய எதிரிகளாக மாறுவார்கள். ஓய்வுநாளை ஆசரிப்பவர்கள் தங்கள் விசுவாசத்திற்குப் பதிலளிக்க நீதிமன்றங்களுக்குமுன் கொண்டுவரப்படும்போது, இந்தத் தேவதுரோகிகள்தாம் அவர்களை தவறாகச் சித்திரித்து, குற்றஞ்சாட்டவும், தவறான அறிக்கைகளாலும் சூழ்ச்சிகளாலும் ஆட்சியாளர்களை அவர்களுக்கு எதிராகத் தூண்டிவிடவும் சாத்தானுடைய மிகவும் சாதுரியமான முகவர்களாக இருப்பார்கள்’.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *கடைசிக்கால நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்வது ஏன் வரவிருக்கிற நெருக்கடியில் முக்கியமான விஷயமாக இருக்கிறது? வேதவாக்கியங்கள் எவ்வாறு வஞ்சகங்களிலிருந்து நம்மைத் தப்புவிக்க உதவுகின்றன?*
2. *உலகெங்கிலும் உள்ள ஜனநாயக அமைப்புகள் பல நூற்றாண்டுகளாக மதச் சுதந்திரத்தின் அரண்களாக உள்ளன. அந்நிலை எவ்வாறு வேகமாக மாறமுடியும்?*
3. *மேலுள்ள எலன் ஒய்டின் அறிக்கையைப் பாருங்கள். அட்வென்டிஸ்டுகள் என்று கூறிக்கொள்பவர்களுடன் நீங்களும் இருக்கக்கூடிய என்ன தேர்வுகளை இன்று செய்கிறீர்கள்?*
4. *இரண்டாம் தூதன் பலத்த சத்தத்தோடு அறிவித்த செய்தி என்ன? பூமியில் தேவ பணியை நிறைவேற்றி முடிப்பதற்கு தனிப்பட்ட விதத்தில் நாம் என்ன ஆயத்தத்தைச் செய்யலாம்?*

# ரஷ்யமொழி பேசுபவர்களுக்கு ஊழியம்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

உக்ரேனியரான வேடிம் கிரினிச்னி, குளிர்சாதன கருவிகளை மாட்டுகிற பணிசெய்ய போர்ச்சுக்கல்லுக்குக் குடிபெயர்ந்தார். இருபது வருடங்களுக்கு பிறகு, ஸ்பெயினில் உள்ள ரஷ்யமொழி பேசுபவர்களுக்கான ஒரு சபையில், உக்ரேனிய அகதிகளுக்காக ஊழியம் செய்கிறவராக மாறினார். அது எப்படி நடந்தது?

“முதலாவது ஒரு சில அங்கத்தினர்களே இருந்தார்கள். பிறகு அநேகர் சேர்ந்தார்கள். அது தேவனுடைய ஆசீர்வாதம்” என்று சொன்னார் 44 வயதான வாடிம்.

உக்ரைனை விட்டுக் கிளம்பின பிறகு வாடிமும் அவரது மனைவி அலினாவும், போர்ச்சுக்கல்லில் குளிர்சாதன வியாபாரத்தை வெற்றிகரமாகச் செய்தார்கள்; அவர்களுக்கு போர்ச்சுக்கல் குடியுரிமை கிடைத்தது. இவ்வாறு 13 வருடங்கள் சென்றன; அப்போது, போர்ச்சுக்கல் மொழி தெரியாத ஒரு குடும்பத்தினர் அங்கு குடிபெயர்ந்து வந்திருந்தார்கள். அவர்களுக்கு உதவும்படி வாடிமிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது; அதுதான் திருப்புமுனையாக அமைந்தது. வாடிமும் அலினாவும் ரஷ்யமொழி பேசுகிற அந்தக் குடும்பத்தினரை தங்களோடு ஆலயத்திற்கு வரும்படி அழைத்தார்கள்; அவர்களுக்கு வேதாகம விஷயங்களை விளக்கினார்கள். மூன்று மாதங்களுக்கு பிறகு, அந்தக் குடும்பத்தினர் இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றார்கள்.

வாடிமுக்கும் அலினாவுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது; ரஷ்யமொழி பேசுகிற பலருக்கு உதவியாக இருந்தார்கள். 18 மாதங்களில், 20 பேர் கூடுகிற வீட்டுச்சபை ஒன்றை ஆரம்பித்தார்கள். வாரந்தோறும் வாடிம் பிரசங்கம் செய்வார்; அலினா பாடல் கூட்டங்களைக் கவனிப்பார். “சனிக்கிழமை சாயங்கால வேளையில் மிகுந்த களைப்பு ஏற்படுமளவிற்கு ஊழியம் பரபரப்பாகச் செல்லும். ஆனாலும் சொல்லொண்ணா திருப்தியும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் காணப்படும்” என்று கூறினார்.

புதியதொரு நோக்கத்திற்கு தேவன் தங்களை அழைத்திருந்ததை அந்தத் தம்பதியர் உணர்ந்தார்கள். தேவனுடைய ராஜ்யத்திற்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதே அவர்களுடைய ஒரே நோக்கம். வியாராத்தை நிறுத்திவிட்டு, பக்கத்து நாடான ஸ்பெயினில் இருந்த சகுண்டோ அட்வென்டிஸ்ட் கல்லூரியில் சேர்ந்தார்கள். நான்கு வருடங்களில் இறையியல் படிப்பில் முதுகலை பட்டம் பெற்றார் வாடிம்.

ஓய்வுநாள் மதியம் தோறும் ரஷ்ய மொழி பேசுகிற 20 பேருக்கு வேதப்பாடம் நடத்தினார்; அந்தச் சமயத்தில் அருகிலிருந்த வேலன்சியா நகரத்தில் தற்காலிக போதகராகப் பணியாற்றினார். சீக்கிரமே 10 பேர் ஆலய ஆராதனைகளில் வழக்கமாக கலந்துகொள்ள ஆரம்பித்தார்கள். ஓய்வுநாள் மதிய வேளையில் கூடுவோரின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. “தங்கள் மொழி தெரிந்தவர்களோடு சேர்ந்து மக்கள் ஆராதனை செய்வது முக்கியம்” என்று வாடிம் சொன்னார்.

ரஷ்யமொழி பேசுகிற சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்தபோது, ஸ்பெயின் மற்றும் இன்டர்–ஐரோப்பிய டிவிஷனின் அட்வென்டிஸ்ட் சபை உதவியுடன் வேலன்சியாவில், ரஷ்ய மொழி பேசுகிறவர்களுக்கான ஒரு சபை துவங்கப்பட்டது.